**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE  DHARMAPURI**

O.S. No.12 of 2021

Deposition of   P.W.1

Name of the Witness:  திரு.P.K.பவுன்ராஜ்

Date : 03.02.2025

**குறுக்கு விசாரணை**

நான் 8வது முடித்து விட்டேன். நான் விற்ற சொத்திற்கு காசோலை கொடுத்தார்கள். அது பணமாகவில்லை. அதனால் வழக்கு போட்டேன். தாவா சொத்துக்கள் என் மனைவி 30.10.2017 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் படி எனக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய சுவாதீனத்தில் இருப்பதால் தான் என் பேரில் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் படி பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2) நான் கிராணைட்ஸ், டிரேஸ்போர்ட், இரும்பு, கோழிப்பண்ணை, விவசாயம், ஸ்பின்னிங் மில், ஓட்டல் தொழில் செய்து வரகிறேன். என் மனைவி எனக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் காணாமல் போய் விட்டதால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து ரசீது வாங்கினேன். பத்திரிக்கையிலும் விளம்பரம் கொடுத்தேன். 2020ல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் காணாமல் போய் விட்டது. தானசெட்டில்மெண்ட் பத்திரம் எப்படி காணாமல் போது என்று தற்போது எனக்கு நியாபகம் இல்லை. பிரதிவாதிக்கு நான் ஆவணம் எழுதி கொடுக்கும் போது போலிசார் எனக்கு வழங்கிய Non Traceable certificateக்கும் சிஎஸ்ஆர்சும் இணைக்கப்பட்டது என்றால் சரிதான்.

3) சிஎஸ்ஆர் ரசீது 24.03.2020ஆம் தேதி சிஎஸ்ஆர் வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் 5.3.2020 அன்று நான்கு ரோடு சென்ற போது அசல் செட்டில்மெண்ட் பத்திரம் எங்கோ விழுந்து விட்டதாகவும் அதை கண்டுபிடித்து கொடுக்குமாறு நான் கொடுத்த புகாரின் பேரில் சிஎஸ்ஆர் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்போது காவல் ஆய்வாளர் ரத்தினகுமார் தான் புகார் ஏற்பு மனு வழங்கியுள்ளார் என்றால் சரிதான். நான் 24ம் தேதி கொடுத்த புகாருக்கு 26ம் தேதி சிஎஸ்ஆர் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

4) தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் பல்வேறு சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூபாய் 35கோடி சொத்துக்கள் மதிப்பு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பல்வேறு தொழில்கள் செய்வதால் பணம் தேவைப்பட்டால் வங்கியில் கடன் வாங்குவேன். கடன் பெறும் போது செய்யப்படும் நடவடிக்கைகள் குறித்து எனக்கு நன்றாக தெரியும். 2019ல் இருந்தே சைனாவிற்கு நூற்பாலை, இரும்பு தாதுகளை எக்ஸ்போர்ட் செய்யும் எங்கள் தொழில் கொரானாவினால் பாதிக்கப்பட்டது.

5) யான் தொழில் பி.கே.பி ஸ்பின்டக்ஸ் பிரவேட் பேரில் நடத்தி வருகிறேன். இந்த நிறுவனத்தை 2011ம் ஆண்டு ஆரம்பித்தேன். இந்த தொழிலுக்காக எஸ்பிஐ இந்தியா சிறுதொழில் கிளையில் கடன் வாங்கியிருக்கிறேன். அந்த நிறுவனத்தை என்ன சர்வே எண்களில் ஆரம்பித்தேன் என்று நியாபகம் இல்லை. நான் காணாமல் போனதாக சொல்லப்படும் பத்திரத்தை எஸ்பிஐ இந்தியா சிறுதொழில் கிளையில்

அடமானம் வைத்து தாவா சொத்து சம்பந்தமாக கடன் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*